Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஷூ ஆனி மீ 28 ஆம் உ வியாழக்கிழமை (12 - 07 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஃ 18 ஓசை 144

## போர்க்கால சேவையில் தனியார் பஸ்கள்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய மினிபஸ்சேவை சங்கத்திற்கும், சமாசத்துக்கும் சொந்தமான வாகனங்களை நாளொன்றுக்கு மூன்று வாகனங்கள் மூலம் தினசரி விடுதலைப் புலிகளுக்குக் கொடுத்துதவி, தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்குத் தமது பங்களிப்பினை வழங்குமாறு வடபிராந்திய மினிபஸ் சங்கத் தலைவர் பொன் மதிமுகராசா சகல பஞ்சாயத்துச் சபைகளையும், சங்கங்களையும் பணித்துள்ளார். இதேவேளை வேறுவிடயங்கள் சம்பந்தமாகக் கலந்துரையாட மினிபஸ் சங்கத் தலைவர்கள், உபதலைவர்கள், செயலாளர்கள் அனைவரையும் தற்காலிக மினிபஸ் சங்கத்தலைவர்கள், உபதலைவர்கள், (4 ஆம் பக்கம் பார்க்க)

# வடமராட்சிக் கடலில் போர்க் கப்பல் தகர்ப்பு!

## மூன்று கரும் புலிகள் தீரச்செயல்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான போர்க்கப்பல் ஒன்று நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமைஇரவு கடற்புலிகளின் கரும்புலிகள் மூவரினால் கடற்படைச் சிப்பாய்களுடன் சேர்த்துத் தகர்க்கப்பட்டது.

கடற்படையைச் சேர்ந்த பீரங்கிப் படகுகள் மற்றும் கடற்படைப் படகுகளுக்கு ஆயுதங்கள் மற்றும் பொருள்களை விநியோகிக்கும் 'தாய்க் கப்பல்' என்று வர்ணிக்கப்படும் இந்தப் போர்க் கப்பல் வல்வெட்டித்துறைக் கடலில் நங்கூரமிட்டு நின்றபோதே நேற்று முன்தினமிரவு பத்து மணியளவில் கடற் புலிகளின் கரும்புலிகள் மூவர் வெடிமருந்து நிரப்பப்பட்ட சிறிய படகில் சென்று கப்பலுடன் மோதித் தகர்த்தனர்.

இந்தப் போர்க்கப்பல்தான் சமீப நாட்களாக வல்வெட்டித்துறைக் கடலிலிருந்து குடிமனைகளை நோக்கிப் பீரங்கித் தாக்குதல்களை நடத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.



கரும்புலி மேஜர்



கரும்புலி கப்டன்



கரும்புலி கப்டன்

### தற்காப்பு யுத்தப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியில் தற்காப்பு யுத்தப் பயிற்சி பெற தமது பெயர்களைப் பதிவு செய்த மாணவர்களுக்கு பயிற்சி தொடர்பான கூட்டம் ஞாயிறு காலை ஒன்பது மணிக்கு சேர்ச் வீதியிலுள்ள மாணவர் இயக்க அலுவலகத்தில் நடைபெறும்.

இதுவரை தமது பெயர்களைப் பதிவு செய்யாத இப் பயிற்சி பெற விரும்பும் மாணவர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகின்றது.

(மு)

### இராணுவச் சூட்டிற்கு மனநோயாளி பலி

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் இரவு யாழ். கோட்டை முகாம் பக்கம் சென்ற மனநோயாளி வயோதிபப் பெண் ஒருவர் ராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். இவ

## கல்முனையில் இராணுவம் ஜிகாத் காட்டுத்தர்பார்; 31 தமிழர் படுகொலை

(கல்முனை)

கல்முனையில் நேற்று முன் தினம் மாலை முப்பத்தியொரு தமிழர்களைச் சிறிலங்கா இராணுவத்தினரும் ஜிகாத் இயக்கத்தினரும் சேர்ந்து வெட்டிக் கொலை செய்துள்ளனர். பின்னர் கொலை செய்யப்பட்டவர்கள் தீ வைத்துக் கொழுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கொலை செய்யப்பட்டவர்களில் ஒரு பெண் மானபங்கப்படுத்தப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டுள்ளார். இக் கொலைகளில் கறுப்புச் சட்டைகளுடன் இருந்த சிறிலங்கா அரசின் மறைமுக கொலைகாரப் படையினர் ஈடுபட்டதாகத் தெரிகிறது.

டாக்டர் சண்முகநாதனும், அவரது மனைவியும் இவ்வாறு கொலை செய்யப்பட்டவர்களில் அடங்குகின்றார்கள்.

அதேவேளை கல்முனை வாடிவீட்டிற்கு அருகிலிருந்த வீடுகளுக்குச் சொந்தமான தமிழர்கள் கொலை செய்யப்பட்டு வீடுகள் யாவும் தீக்கி (4ஆம் பக்கம் பார்க்க)

## மண்மீட்பு யுத்தத்தில் மாணவர் பங்கேற்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா அரசானது மீண்டும் இன அழிப்பு யுத்தமொன்றைத் தமிழ்ப் பிரதேசமெங்கும் கட்டவிழ்த்து விட்டிருக்கும் இவ் வேளையில் அதற்கெதிரான மண்மீட்பு யுத்தத்தில் மாணவர்கள் அனைவரும் பங்கெடுக்க முன்வரவேண்டும்

இவ்வாறு நேற்று கோப்பாய் எச்ஸ்பிறஸ் கல்வி நிலையத்தில் நடைபெற்றமாணவர்களுக்கான போர்க்கால நடவடிக்கைகள் சம்பந்தமான கலந்துரையாடலில் பேசிய விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கப் பொறுப்பாளர் பாரதி குறிப்பிட்டார்.

''தமிழீழவிடுதலைப்போரா (4 ஆம பக்கம் பார்க்க)

## கொக்காவிலில் கடும் மோதல் விமானங்கள் குண்டு வீச்சு

(கிளிநொச்சி)

கொக்காவிலில் நேற்று முன் தினம் மாலை ஐந்து மணியிலிருந்து விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும் சண்டை மூண்டுள்ளது. கொக்காவில் இராணுவமுகாமைச் சுற்றிவளைத்து விடுதலைப் புலிகள் தாக்கி வருகின்றனர். இத்தாக்குதலைச் சமாளிக்க முடியாத நிலையில் இராணுவத்தினர் விமானப் படையின் உதவியை நாடினர்.

நேற்றுமுன்தினம் மாலை 5.30மணியளவில்ஆரம்பமான இம்மோதல் நேற்று இரவு வரையும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ரவு சுமார் ஒன்பது மணியளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று உதவிக்கு வந்தது. அதைத் தொடர்ந்து மேலும் ஒரு ஹெலிக்கொப்டரும், இரண்டு பொம்பர் குண்டுவீச்சு விமானங்களும் வந்துபலத்த குண்டு வீச்சுகளை மேற்கொண்டன.

இரவிரவாக கடுமையான (4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் நாட்டுக்கு நேற்று 2600 அகதிகள் வந்தனர்

(இராமேஸ்வரம்)

இலங்கைத் தமிழ் அகதிகள் இரண்டாயிரத்து அறுநூறு பேர் நேற்று படகுகள் மூலம் இராமேஸ்வரம் வந்துள்ளனர்

கடந்த மாதம் 11ஆம் திகதி ஏற்பட்ட யுத்தத்தின் பின்னர்

வந்துள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை தமிழகத்துக்கு அகதிகளின் வருகை அதிகரிப்பையடுத்து அவர்களை கவனிக்க சி.எம் ராமதாஸ் என்ற அதிகாரியை தமிழக

இந்தப் போர்க்கப்பல்தான் சமீப நாட்களாக வல்வெட்டித்துறைக் கடலிலிருந்து குடிமனைகளை நோக்கிப் பீரங்கித் தாக்குதல்களை நடத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.



கரும்புலி மேஜர் காந்தரூபன்



கரும்புலி கப்டன் கொலின்ஸ்



கரும்புலி கப்டன் வினோத்

சிறிலங்கா கடற்படைப் போர்க்கப்பலைத் தகர்த்து திரச்செயல் புரிந்து தம்மைத் தியாகம் செய்துகொண்ட கடற்புலிகளில் கரும்புலிகளான மேஜர் காந்தரூபன் (வல்வெட்டித்துறை) கப்டன் வினோத் (வல்வெட்டித்துறை) கப்டன் கொலின்ஸ் (மன்னார்) ஆகியோருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொண்ட வேளையில் மக்கள் தமது வீர அஞ்சலியைச் செலுத்தினர்.

# தமிழர் படுகொலை, அகதிகள் பற்றி கருணாநிதி வி. பி. சிங் பேச்சு

(திருச்சி)

இலங்கையில் அரசபடைகளால் அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவது குறித்தும், அதனால் பெருமளவு தமிழ் அகதிகள் தமிழ் நாட்டுக்கு வருவது மற்றும் அதனால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் இன்று பிரதமர் வி. பி. சிங்குடன் தொலைபேசிமூலம் பேசவிருப்பதாக தமிழ்நாடு முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்தால் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுகின்றனர். வீடு வாசல்கள் தமது வாழ்க்கை யாவற்றையும் இழந்து பல்லாயிரக்கணக்கில் அகதிகளாக அங்கிருந்து இங்கு வந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர் சொன்னார்.

இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்புவதா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் முன்னணி 1000குடும்பங்களுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கிலுள்ள பாதிப்பினால் இடம்பெயர்ந்த ஏழு முகாம்களில் இருந்த 1,000 குடும்பங்களுக்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன

இதன் போது அரிசி, மண்ணெண்ணெய் குழந்தைகளுக்கான பால்மா மற்றும் மேலதிக உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

இவற்றை கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாதிரி நிர்வாகச் செயலகத்தினர் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ச. டொமினிக் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கினர். (ம)

# முருங்கனில் மருத்துவமனை உட்பட வீடுகள் கடைகள் எரிப்பு; கொள்ளை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் இராணுவத்தினர் அடாவடித்தனத்தில் ஈடுபட்டுள்ளனர். அங்கு கடைகளையும், மருத்துவ மனைகளையும், ஏராளமான வீடுகளையும் தீயிட்டுக் கொழுத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மன்னார் முருங்கன் வீதியில் மொத்தம் 96 கடைகளும் வீடுகளும் எரிக்கப் பட்டுள்ளன. மேலும் முப்பது கடைகளும் வீடுகளும் கொள்ளையிடப் பட்டுள்ளன

அத்துடன் இக்பால் மருத்துவ மனையும், ராஜன் மருத்துவ மனையும் இராணுவத்தினால் எரித்து முற்றாக நாசம் செய்யப் பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

...அலுவலகத்தில் நடைபெறும்.

இதுவரை தமது பெயர்களைப் பதிவு செய்யாத இப் பயிற்சி பெற விரும்பும் மாணவர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகின்றது. (மு)

## இராணுவச் சூட்டிற்கு மனநோயாளி பலி

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் இரவு யாழ். கோட்டை முகாம் பக்கம் சென்ற மனநோயாள வயோதிபப் பெண் ஒருவர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். இவரது உடலை நேற்று அதிகாலை விடுதலைப்புலிகள் கோம்பயன் மயானத்தில் தகனம் செய்தனர். (ம)

## அவை போர்க் கப்பல்கள்இல்லை

(புதுடில்லி)

இந்தவாரம் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்த இரு பாகிஸ்தான் கப்பல்களும் போர்க்கப்பல்கள் இல்லை என வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவை போர்க்கப்பல்கள் என்று பத்திரிகைகளில் வந்த செய்தி தவறானவை எனவும் அவர் தெரிவித்தார்.

## பலாலி மோதலில் நான்கு இராணுவம் பலி

(பலாலி)

பலாலி இராணுவமுகாமிலிருந்து நேற்று முன்தினம்வெளியேற முற்பட்ட இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடந்த மோதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

நண்பகல் ஒரு மணியளவில் வெளியேற முற்பட்ட சிங்கள இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் முன்னேறிச் சென்று தாக்குதலை நடத்தினர். இராணுவத்தினர் நால்வர் கொல்லப்பட்டனர். மற்றைய இராணுவத்தினர் பலத்த சேதத்துடன் பின்வாங்கிச் சென்றனர்.

இத்தாக்குதலின் போதுவிடுதலைப் புலிகள் தரப்பில் சீனிவாசன் (சுன்னாகம்) என்பவர் வீரமரணமடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகள்தமதுவீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 5 மீனவர் கைது

(சென்னை)

கடந்த மாதம் சென்னையில் ஈ. பி. ஆர். எல். எப் இயக்கத்தினர் கொலை தொடர்பாக ஐந்து இந்திய மீனவர்கள் கைது செய்யப் பட்டதாக இந்திய வானொலி நேற்றிரவு அறிவித்தது.

## இல. தமிழருக்கு புதிய முகாம்கள்

(சென்னை)

இலங்கைத் தமிழ் அகதிகள் எழுநூறுபேர் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் நாளை அல்லது மறுநாள் தங்கவைக்கப்படவுள்ளனர்.

நாராயணாம்பாள் பகுதி முகாமில்முன்னூற்றிபதினாறு அகதிகள் தங்கியுள்ளனர்.

(கிளிநொச்சி)

கொக்காவிலில் நேற்று முன்தினம் மாலை ஐந்து மணியிலிருந்து விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும் சண்டை மூண்டுள்ளது. கொக்காவில் இராணுவமுகாமைச் சுற்றிவளைத்து விடுதலைப் புலிகள் தாக்கி வருகின்றனர். இத்தாக்குதலைச் சமாளிக்க முடியாத நிலையில் இராணுவத்தினர் விமானப் படையின் உதவியை நாடினர்.

நேற்றுமுன்தினம் மாலை 5.30மணியளவில்ஆரம்பமான இம்மோதல் நேற்று இரவு வரையும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இம்மோதல் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் நேற்றிரவு சுமார் ஒன்பது மணியளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று உதவிக்கு வந்தது. அதைத் தொடர்ந்து மேலும் ஒரு ஹெலிக்கொப்டரும், இரண்டு பொம்பர் குண்டுவீச்சு விமானங்களும் வந்துபலத்த குண்டு வீச்சுகளை மேற்கொண்டன. இரவிரவாக கடுமையான

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் நாட்டுக்கு நேற்று 2600 அகதிகள் வந்தனர்

(இராமேஸ்வரம்)

இலங்கைத் தமிழ் அகதிகள் இரண்டாயிரத்து அறுநூறு பேர் நேற்று படகுகள் மூலம் இராமேஸ்வரம் வந்துள்ளனர்

கடந்த மாதம் 11ஆம் திகதி ஏற்பட்ட யுத்தத்தின் பின்னர் இதுவரை இருபதாயிரத்துக்கும் அதிகமாக அகதிகள் வந்துள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை தமிழகத்துக்கு அகதிகளின் வருகை அதிகரிப்பையடுத்து அவர்களை கவனிக்க சி.எம் ராமதாஸ் என்ற அதிகாரியை தமிழக அரசு நியமித்துள்ளது.

### விடுதலையாகும் இளைஞர்கள்

# விடுதலைப் போராட்ட உணர்வு ஊட்டப்பட வேண்டியவர்கள்

**-ஆஞ்சநேயர்**

(உரும்பிராய்)

இன்று தமிழ்பேசும் மக்கள் வாழ்வா சாவா என்று இறுதிக்கட்ட போராட்டத்தில் நிற்கும் இவ்வேளையில் தேசத்திற்கெதிராக செயற்பட்ட தேசத்துரோகிகளால் வழிநடத்தப்பட்ட இந்த இளைஞர்களின் சுதந்திரத்தின் அவசியத்தை புரிந்துகொண்டு அவர்களின் எதிர்காலத்தை உணர்ந்துகொண்டு அவர்களை இவ்விடத்தில் விடுதலை செய்கிறோம் என நேற்று உரும்பிராய் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி காரியாலயத்தில் வைத்து தடுத்துவைக்கப்பட்டிருந்த அறுபத்திமூன்று இளைஞர்களை விடுவித்த போது வலிகாமம் பகுதி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பொறுப்பாளர் ஆஞ்சநேயர் பேசும் பொழுது தெரிவித்தார்.

மேலும் திரு. ஆஞ்சநேயர் பேசும்பொழுது இன்று விடுதலையாகும் இவர்களை பூரண மனிதர்களாக்கி ஒழுங்காக எதிர்காலத்தில் வளர்த்தெடுக்க வேண்டியது இவர்களு

(4ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் 1லட். அகதிகள்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் சுமார் ஒரு லட்சம் [ink blot]ர் அகதிகளாக இருப்பதா[ink blot] கொழும்பில் தெரிவிக்கப்ப[ink blot].

## பாலம்போட்டாற்றில் புலிகள் இராணுவம் மீது தாக்குதல்

(திருக்கோணமலை)

பாலம் போட்டாறு என்னும் இடத்தில் கொழும்பிலிருந்து திருமலைநோக்கிவந்து கொண்டிருந்த 15 இராணுவ வாகனத்தொடர் மீது விடுதலைப்புலிகள் தாக்கியதில் முன்னால் வந்த "லான் ரோலர்" என்னும் வாகனம் முற்றாக சேதமடைந்தது. இதனை அடுத்து வந்த ரக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலி தாக்கி; வீடுகள் சேதம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுமாவட்டத்தில் தண்ணீரூற்று என்னும் இடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஹெலித் தாக்குதலில் இரண்டு வீடுகள் முற்றாகச் சேதமுற்றன. மேலும்இரண்டு பொது மக்கள் காயமடைந்தனர். (ம)

## வல்வையில் வீர அஞ்சலி

(வல்வெட்டித்துறை)

கடற்படை மீதான தாக்குதலில் வீரமரணம் அடைந்த கரும்புலி மேஜர் காந்தரூடன் வல்வெட்டித்துறை, கப்டன் வினோத் வல்வெட்டித்துறை,

(4 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழர் புனர்[ink blot]ாழ்வுக் கழகம்

# மக்க[ink blot]ருக்கு சேவை செய்ய இளைஞர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் இடர்படுகின்ற எமது மக்களுக்கு சேவையாற்றுவதற்கான தொண்டர் அமைப்பொன்றை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அமைத்துள்ளது.

இவ்வமைப்பில் இணைந்து எமது க்களுக்கு சேவையாற்ற விரும்புகின்ற இளைஞர்கள், மாணவர்கள், மாணவியர்கள் அனைவரையும் 83/2 காங்கேசன்துறை வீதி, கொக்குவில் (கொக்குவில் சந்திக்கருகாமை) என்ற முகவரியில் தொடர்பு கொள்ளும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

சுண்டுக்குளி [illegible] நூலகம்



# குறுகியகால உணவுற்பத்தியில் தமிழ் மக்கள் ஈடுபடவேண்டும்

## பொருளாதாரத் தடையை உடைக்க தமிழீழ ஆய்வு நிறுவனம் யோசனை

**போர்க்கால விவசாய உற்பத்தி அபிவிருத்தித் திட்டம்**

வடக்கு - கிழக்கு பகுதியில் தற்பொழுது நடந்து கொண்டிருக்கும் யுத்தத்தின் விளைவாக எமது தாயகம் ஸ்ரீலங்காவுடன் முற்றுமுழுதாகத் துண்டிக்சப் பட்டுள்ளது. இது தவிர ஸ்ரீ லங்கா அரசு வேண்டுமென்றே எங்கள் பிரதேசத்தில் பொருளாதாரத் தடை ஒன்றை செயற்கையில் ஏற்படுத்தி சமூக பொருளாதார ரீதியாக எம் மக்களையும், எமது இயக்கத்தையும் சரணடையச் செய்யும் யுத்திகளை கையாளுகின்றது. இந்த நடவடிக்கையை முறியடிப்பதற்கு நாம் அனைவரும் எமது உணவுத் தேவைகளுக்கு வட-கிழக்கு மாகாணத்தின் விவசாய உற்பத்தியிலேயே தங்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

இவற்றை மனதிற் கொண்டே கீழ்க்சாணும் செயல் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இச்செயல் திட்டத்தில் இயன்றவரை தமிழ் மக்களுக்கு தேவையான உணவு உற்பத்தியை அந்தந்த மாவட்டங்களில் குறுகிய காலத்தில் உடனடியாக உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்தல் முதன்மையானதாகும்.

இதற்கானசெயல்முறையில் பயிர்களை இனங்காணுதல் முக்கியமானதாகும். அதாவது குறுகியகால பயிர்களைஇனங்கண்டு கொள்ளுதலும்,விவசாயிகளை அவ்வினங்களைப் பயிரிட அறிவுறுத்தலுமாகும்.இவ்வாறான இப்பயிரினங்களின் தன்மைகள் பின்வருமாறு அமைதல் வேண்டும்.

பணவருவாய் பயிராக இல்லாது புரதம், மாச்சத்து நிறைந்த உணவுப் பயிராக இருத்தல் வேண்டும்.

குறுகிய காலத்தில் அறுவடைக்குட்படும் வீரியஇனமாக இருத்தல் வேண்டும்.

குறைந்த நீர் முகாமைத்துவத்துடன் சிறந்த பலனை அளிக்கக் கூடியதான பயிராக இருத்தல் வேண்டும்.

இவ்வாறான பயிர்கள் கௌபி, பாசிப்பயறு, வற்றாளை, சோளம், சோயா அவரை, குரக்கன், உழுந்து என்பனவாகும்.

**விதை சேகரித்தலும் விநியோகமும்**

தமிழ் மக்களுக்கு மேல் இப்போரானது சடுதியாக திணிக்கப்பட்டதன் விளைவாக எமது பிரதேசத்திற்குத் தேவையான மேற்கூறிய பயிர்களின் விதைகள் போதிய அளவு கையிருப்பில் இல்லாதுள்ளது. இதனால் நாம் விதைகளை உணவுக்காகச் சேமித்து வைத்துள்ள தானியங்களின் முளைத் திறன்களை பரிசோதித்த பின் சிறந்த முளைத்திறன் உள்ளவற்றை விதைகளாகப் பாவிக்க நடவடிக்கை எடுத்தல்.

சிறந்த விதைகளைக் கொள்வனவு செய்து உதவி விவசாயப் பணிப்பாளர்(விரிவாக்கம்) ஊடாக அந்தப் பிரதேசத்திலுள்ள விவசாய விரிவாக்கப் போதனாசிரியர்கள் மூலம் விவசாயிகளை அடையச் செய்தல்.

**காணிகளை இனங்காணுதல்**

தற்பொழுது விவசாயத்தில் ஈடுபடுத்தக் கூடிய அனைத்துக் காணிகளையும் உணவு உற்பத்தி மையமாகக் கொண் டுஇனம் கண்டு முற்று முழுதாகப் பயிர் செய்கைக்கு உட்படுத்தல்.

இச்செயற்பாடு உதவிப் பணிப்பாளர் (விவசாயம் விரிவாக்கம்) அவர்களின் அறிவுரைகளையும், அனுசரணையையும் பெற்று நிறைவேற்றப் படடல் வேண்டும்.

**உற்பத்தியாளர் பிரச்சினை**

1) பணப்பயிர்களைசுயஇலாபம் கருதி விவசாயம் செய்தலை உடன் தடுத்துநிறுத்தல்

2) உற்பத்தி செய்யப்படும் உணவுப்பயிர்களுக்கு தகுந்த விலை நிர்ணயித்தலும், சந்தைப் படுத்தலும், வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தலும்.

3) உற்பத்தியாளர்களின் மனோநிலையையும், உற்பத்தித் திறனையும்ஒருமுகப்படுத்துதலும், உணவு உற்பத்தியில் ஊக்கம் ஏற்படுத்தச் செய்தலும்.

**கிராமியக் குழுக்கள்**

கிராமிய உற்பத்திக் குழுக்களும், கமநல சேவைநிலைய மட்டக் குழுக்களும் உறுப்பினர்களுக்கு மேற்குறிப்பிட்ட செயல் திட்டத்தை முன் வைத்து அவர்கள்அனைவரின் உதவியுடன் செயல் திட்டம் வெற்றிபெற வைத்தல் வேண்ம்.

# கருத்து வெளியிட இந்தியா மறுப்பு

(டில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை நடாத்தும் வகையில் சிறிலங்கா அரசு வைத்துள்ள புதிய நிபந்தனை குறித்து எவ்விதக் கருத்தையும் தெரிவிக்க இந்தியா மறுத்துள்ளது.

சர்வதேச பிரதிநிதிகள் முன்னிலையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையி[...]

[...]வின்நிலைப்பாடு குறித்து டில்லியில் கருத்துத்தெரிவித்த வெளியுறவு உயரதிகாரி ஒருவர் வடக்கு, கிழக்கில் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் குறித்து இலங்கை அரசுடன் இந்தியா தொடர்ந்து தொடர்பு கொண்டுவருவதாகவும் தெரித்தார்.

இலங்கையின் நடப்புகள் பற்றிய விடயத்தில் இந்தியா

## 10 நாட்கள் பட்டினி கிடந்ததாக
# இராமேஸ்வரத்தில் தமிழ் அகதிகள் தகவல்

(சென்னை)

நேற்று முன்தினம் மாத்திரம் 3060 இலங்கை தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் சென்றடைந்துள்ளார்கள்.

தலைமன்னார், பேசாலை பகுதிகளைச் சேர்ந்தவர்களே பெருமளவில் சென்றுள்ளனர்; இவர்களில் பெண்கள், குழந்தைகள் உட்பட இளைஞர்களும் அடங்குவர்.

தொடர்ந்து பத்து நாட்கள் இலங்கையில் பட்டினி கிடந்ததாக இராமேஸ்வரத்தில் தகவல் தெரிவித்துள்ள அகதிகள் இங்கு மேற்கொள்ளப் பட்டு வரும் இன அழிப்புக் குறித்தும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இராமேஸ்வரம் மண்டபம் முகாமில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியைத் தொடர்ந்து 700 தமிழ் அகதிகள் மதுரை முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மாநில அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## சாவகச்சேரி பள்ளிவாசலில் அகதிகள்

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து சாவகச்சேரிப் பகுதிக்கு சுமார் இருநூற்றி எழுபது முஸ்லிம் குடும்பங்கள் இடம் பெயர்ந்து வந்து சேர்ந்துள்

# கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோகம் பாதிக்கப்படும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகிறது. உரம், கிருமிநாசினி தட்டுப்பாடே இதற்குக் காரணம் என விவசாயிகள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி நகரிலுள்ள பசளைக் கடைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. இதனால் உரம் கிருமிநாசினி போன்றவற்றைப் பெற முடியாது விவசாயிகள் கஷ்டப் படுகிறார்கள்.

உரங்கள் கிடைத்தாலும் அது பல மடங்கு கூடிய விலைக்கே வாங்க வேண்டிய நிலையில் இருக்கிறது.

அதே போல கிருமிநாசினியும் பல மடங்கு விலை கொடுத்தே வாங்கவேண்டிய நிலையில் இருக்கிறது.

இதனால் வறிய விவசாயிகள் உரம் போடுவதையும், கிருமிநாசினி தெளிப்பதையும் கை விட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு வெளிமாவட்டங்களில் இருந்து பெரும் தொகையாக தினமும் அகதிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் விவசாயமும் பாதிக்கப்படுமானால் இங்குள்ளவர்களுக்கு உணவுத் தட்டுப்பாடு பெருமளவு ஏற்படக் கூடும் என மக்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

இது தவிர டீசல் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. டீசல் தட்டுப்பாட்டை நீக்கா விட்டால் சிறுபோக நெல் அறுவடையின் போது சூடு அடிக்க உழவு இயந்திரங்கள் கிடையாது போகலாம்.

அப்போது சூடு அடிக்க கூட முடியாத நிலை எற்படலாம். இதனால் நெல்லின் விலை பல மடங்கு ஏறக்கூடிய சாத்தியக் கூறுகள் தென் படுகின்றன.

இது தவிர டீசல் தட்டுப்பாடு தொடர்ந்து நிலவுமானால் காலபோகவேளாண்மையும் செய்ய முடியாதநிலைஏற்படக்கூடும். (49)

## நிவாரணப்பணி கூட்டம்

(வேலணை)

இடம்பெயர்ந்த மக்கள் நிவாரணப் பணி சம்பந்தமாக உரையாடுவதற்காக உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளையின் சகல அங்கத்தவர்களையும் எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை பி. ப. 2.00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள தலைமைச் செயலகத்தில் கூடுமாறு மேற்படி இயக்கச் செயற்குழு கேட்டுள்ளது. (14)

# சீனிப் பதுக்கலைத் தடுக்க விடுதலைப் புலிகள் நடவடிக்கை

(சாவகச்சேரி)

சீனி மூடைகளை பதுக்கி வைத்து பொதுமக்களுக்கு அதிக விலைக்கு விற்பதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் தமிழீழ விடுதலை புலிகள் மக்கள் முன்னணி தென்மராட்சிபிரதேசப் பகுதியினர் சுறுசுறுப்பாக உள்ளனர்.

இது தொடர்பான வேட்டையில் அவர்கள் தீவிரமாக நடத்திய தேடுதலில் சாவகச்சேரி, மீசாலை, டச்சு வீதிப் பகுதிகளில் அவர்கள் பல பதுக்கல் சீனி மூடைகளை கண்டு பிடித்ததாக தெரிய வருகிறது. (35)

# பனையில்இருந்து உபஉணவை உற்பத்தி செய்ய வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

''சகல தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும் கள் உற்பத்தியை நிறுத்தி, பனை மரங்களிலிருந்துபதனீர் உற்பத்தி செய்து அதிலிருந்து பனங்கட்டி, பனம்சீனி, குளிர் பானம் போன்ற ஏனைய உப உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து எமது மக்களின் அத்தியாவசியத் தேவையை ஓரளவிற்காவது பூர்த்தி செய்வதற்கு எம்முடன் சேர்ந்து ஒத்துழைப்பு வழங்கவும்''.

இவ்வாறு கோண்டாவிலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாதிரி நிர்வாகச் செயலகத்தில் இருந்து கேட்கப்பட்டுள்ளது. (ம)

## மக்கள் அவதி

(உரும்பராய்)

இரு வாரங்களுக்கு முன் உரும்பராய் தெற்கு வேம்பன் ஒழுங்கையில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை 7/3 இல் உள்ள உணவுப் பொருட்கள் களவாடப்பட்டுள்ளது. அதனால் அக்கிளை மூடப்பட்டுள்ளது.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



2-ஆவது லெப்
அனுரா (டெனிஸ்)
(முன்னாள், யாழ்
இந்து S. O. L. T.
பொறுப்பாளர்)
தாயின் மடியில்:
03-04-1968
தாயக மண்ணில்:
12-07-1987

உன்
முகம் காணாது
மூன்றாண்டு போனதே!
விடுதலை வீரனாய்
வரலாற்றில்
பதியப்பட்டு
மூன்றாண்டு போனதே!
உன்
இலட்சியங்கள்
இன்றும்
அதே தாகத்துடனும்
அதே வேகத்துடனும்
ஆனால்
வேற்றுருவில்
வெல்லப்பட்டு
வருகின்றன!

-- நண்பர்கள்

(B 512)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

# அகதியின் சைக்கிள்

# கருத்து வெளியிட இந்தியா மறுப்பு

(டில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை நடாத்தும் வகையில் சிறிலங்கா அரசு வைத்துள்ள புதிய நிபந்தனை குறித்து எவ்விதக் கருத்தையும் தெரிவிக்க இந்தியா மறுத்துள்ளது.

சர்வதேச பிரதிநிதிகள் முன்னிலையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையிலான பேச்சுக்கள் இடம் பெற வேண்டும் என்பதே அரசின் புதிய நிபந்தனையாகும். இந்த நிபந்தனையை ஜனாதிபதி பிரேமதாசா நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.

சிறிலங்கா அரசின் இந்த நிபந்தனை பற்றிய இந்தியாவின் நிலைப்பாடு குறித்து டில்லியில் கருத்துத்தெரிவித்த வெளியுறவு உயரதிகாரி ஒருவர் வடக்கு, கிழக்கில் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் குறித்து இலங்கை அரசுடன் இந்தியா தொடர்ந்து தொடர்பு கொண்டுவருவதாகவும் தெரித்தார்.

இலங்கையின் நடப்புகள் பற்றிய விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து அண்மையில் டில்லி வந்திருந்த வெளியுறவு செயலர் பேர்னாட் திலகரத்தினாவிடம் தெரிவித்த கருத்துக்களையும் அந்த வெளியுறவு உயரதிகாரி சுட்டிக்காட்டி உள்ளதாக கூறப்பட்டது.

## "புலிகளுக்கு எதிராக போரிடுவதை கற்றுள்ளோம்"

(கொழும்பு)

இந்திய இராணுவத்தைப் போல பெரிய அணியாகச் சென்று போராடாமல் சிறு சிறு குழுவாகச் சென்று புலிகளை எதிர் கொள்ள வேண்டும் என்று வவுனியாவில் ஸ்ரீ லங்கா படை கேணல் குலதுங்கா கூறினார்.

கடந்தகால போர் அனுபவங்களில் நாம் இதனைப் படித்துள்ளோம். விடுதலைப் புலிகளை நிர்மூலமாக்கும் திறனையும் பெற்றுள்ளோம் என்றும் அவர் கூறினார்.


**OFFICE EQUIPMENT LTD.**

**இடமாற்றம்**

140, நாவலர் வீதியில் இயங்கிய **OFFICE EQUIPMENT LTD.** ஸ்தாபனம் தற்காலிகமாகத் தனது அலுவலகத்தை இடமாற்றம் செய்துள்ளது.

பின்வரும் இடங்களில் தொடர்பு கொள்ளலாம்-

1. நம். 537, சிவன்கோவில் வீதி, (CENTRAL NURSING HOME முன்பாக) திருநெல்வேலி தெற்கு.
2. உருக்குத்தளபாட உற்பத்தித் தொழிற்சாலை வேம்பன் றோட், (பெற்றோல் செட் முன்பாக) உரும்பிராய்.

அலுவலக நேரம்: காலை 8.30 மணி தொடக்கம் பி. ப. 1.00 மணி வரை.

(B/ 1226)


நேற்று முன்தினம் மாத்திரம் 3060 இலங்கை தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் சென்றடைந்துள்ளார்கள்.

தலைமன்னார், பேசாலை பகுதிகளைச் சேர்ந்தவர்களே பெருமளவில் சென்றுள்ளனர்; இவர்களில் பெண்கள், குழந்

## சாவகச்சேரி பள்ளிவாசலில் அகதிகள்

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து சாவகச்சேரிப் பகுதிக்கு சுமார் இருநூற்றி எழுபது முஸ்லிம் குடும்பங்கள் இடம் பெயர்ந்து வந்து சேர்ந்துள்ளன. இக்குடும்பங்கள் சாவகச்சேரி மொகைதீன் ஜும்மா பள்ளி வாசலிலும், இன்னும் வேறு இடங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளன.

சாவகச்சேரி மொகைதீன் ஜும்மா பள்ளிவாசலைச் சேர்ந்தவர்கள், இடம் பெயர்ந்து வந்த இந்த முஸ்லிம் குடும்பங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருகிறார்கள். தென்மராட்சி அகதிகள் புனர்வாழ்வு கழகமும் இவர்களுக்கு உதவுவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து வருவதாகக் கூறப்படுகிறது. (35)

## அகதிகளாக வெளியேறியோர் வீட்டில் கொள்ளை

(நெடுந்தீவு)

அகதிகளாக நெடுந்தீவுக்குச் சென்று திரும்பிய யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவாசிகள் தமது வீடுகளை பார்க்கச்சென்றபோது அவை உடைக்கப்பட்டு வீட்டுப் பொருட்கள்யாவும் களவாடப்பட்டமைகண்டுகவலையடைந்துள்ளனர்.

பெறுமதி மிக்க பொருட்களுடன், துணிமணிகளும் களவாடப்பட்டிருந்ததுடன், ஆவணங்கள் பலவற்றையும் சிதைவுறச் செய்துள்ளனர்.

ஆசிரியர் இரா. ஜெயசீலன், ச. கணேசதாசன் ஆகியோரின் வீடுகளேஇவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளன. பொம்மர் தாக்குதலுக்குத் தப்பித்துக் கொள்ள வீட்டிலிருந்தோர் நெடுந்[illegible]ற்குச் சென்றிருந்த சந்தர்[illegible]தைப் பயன்படுத்தி கொ[illegible]யர்கள் தமது கைவரி[illegible]சயைக் காட்டியுள்ளனர். (62)

## [illegible]ஆலயங்களில் அகதிகள் தஞ்சம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு புனித பற்றிமாதா ஆலயம், இளவாலை லூர்து மாதா ஆலயம், யூதாததேயு ஆலயம் என்பனவற்றிலும் பல அகதிகள் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்கள் கீரிமலை, மயிலிட்டி பகுதிகளைச் சேர்ந்தவர்கள். (12)

ளும் அடங்குவர்.

தொடர்ந்து பத்து நாட்கள் இலங்கையில் பட்டினி கிடந்ததாக இராமேஸ்வரத்தில் தகவல் தெரிவித்துள்ள அகதிகள் இங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் இன அழிப்புக் குறித்தும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இராமேஸ்வரம் மண்டபம் முகாமில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியைத் தொடர்ந்து 700 தமிழ் அகதிகள் மதுரை முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மாநில அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(யாழ்ப்பாணம்)

"சகல தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும் கள் உற்பத்தியை நிறுத்தி, பனை மரங்களிலிருந்துபதனீர் உற்பத்தி செய்து அதிலிருந்து பனங்கட்டி, பனம்சீனி, குளிர்பானம் போன்ற ஏனைய உப உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து எமது மக்களின் அத்தியாவசியத் தேவையை ஓரளவிற்காவது பூர்த்தி செய்வதற்கு எம்முடன் சேர்ந்து ஒத்துழைப்பு வழங்கவும்".

இவ்வாறு கோண்டாவிலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாதிரி நிர்வாகச் செயலகத்தில் இருந்து கேட்கப்பட்டுள்ளது. (ம)

## மக்கள் அவதி

(உரும்பராய்)

இரு வாரங்களுக்கு முன் உரும்பராய் தெற்கு வேம்பன் ஒழுங்கையில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை 7/3 இல் உள்ள உணவுப் பொருட்கள் களவாடப்பட்டுள்ளது. அதனால் அக்கிளை மூடப்பட்டுள்ளது.

## அதிபரின் சைக்கிள் மாயமாய் மறைந்தது

(யாழ்ப்பாணம்)

பாடசாலை வளவுக்குள் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் திடீரென மாயமாய் மறைந்துவிட்டது. வயாவிளான்மத்திய மகாவித்தியாலய அதிபரின் சைக்கிளே இவ்வாறு மாயமாய் மறைந்துள்ளது.

மேற்படி வித்தியாலயம் இராணுவ நடவடிக்கைகளால் சேதமாக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கிருந்த ஆவணங்களை பாதுகாக்கும் வகையில் வேறோர் இடத்துக்கு மாற்றும் வேலையில் ஈடுபட்டிருந்தார். இந்த வேலைகள் முடிவுற்றதின் பின்பு வெளியில் வந்து பார்த்த பொழுதே தனது சைக்கிள் மாயமாய் மறைந்துவிட்டதை அறியக் கூடியதாக இருந்தது.

இந்த சைக்கிளை வைத்திருப்பவர்கள் அதனை மருதனாமடம் உதவிக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு மேற்படி அதிபரால் கேட்கப்பட்டுள்ளது.

## ஆயுர்வேத வைத்தியசாலை இடம்மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பழைய மின்சார நிலையத்தில் அமைந்திருந்த யாழ். மாநகராட்சி மன்ற சித்த ஆயுர் வேத இலவச வைத்தியசாலை பாதுகாப்புக் காரணமாக நல்லூர் கல்யாண மண்டபத்துக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது.

## பயிலுநர் ஆசிரியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த சகல பயிலுநர் ஆசிரியர்களையும் இன்று 12.7.90 9 00 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துமகா வித்தியாலயத்தில் நடைபெற இருக்கும் கூட்டத்திற்கு தவறாது சமுகம் அளிக்கும்படி மேற்படி சங்கம் கேட்டுள்ளது.

## ஆசிரியர் சங்கக் கலந்துரையாடல்

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சகல பயிலுநர் ஆசிரியர்களையும் இன்று வியாழக் கிழமை காலை 10.00 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் நடக்கவிருக்கும் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளும்படி உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுப் பயிலுநர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.


**பனை அபிவிருத்திச் சபை**


**ஊழியர்களின் கவனத்திற்கு**

தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்கமுடியாத ஊழியர்கள் மீசாலை, வரணி, சிங்கைநகர், திக்கம், சுன்னாகம், கைதடி ஆகிய இடங்களிலுள்ள உற்பத்தி நிலையங்களில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

பொது முகாமையாளர்,
பனை அபிவிருத்திச் சபை
(B. 1242)


விடுதலை வீரனாய்
வரலாற்றில்
பதியப்பட்டு
மூன்றாண்டு போனதே!
உன்
இலட்சியங்கள்
இன்றும்
அதே தாகத்துடனும்
அதே வேகத்துடனும்
ஆனால்
வேற்றுருவில்
வெல்லப்பட்டு
வருகின்றன!
-- நண்பர்கள்
(B 512)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**வேலுப்பிள்ளை முருகேசு**

(இளைப்பாறிய புகையிரத ஊழியர்)

அன்னை படைப்பில் 14-10-1923 — அரக்கர் அழிப்பில் 23-06-1989

திதி: 12-07-1990

அன்பின் திருவுருவாய் பாசத்தின் பிறப்பிடமாய்
எங்களோடு இருந்தீர்கள் அப்பா!
தமிழ்ஈழம் மலர உங்கள் உழைப்பை நல்கியதால்
சமூகத் துரோகிகளால் அழிக்கப்பட்டீர்கள்!
உங்கள் பெருமை உலகுள்ள காலம்வரை வாழும்
நீங்கள் என்றும் எம் இதயத்தில் வாழ்ந்திடுவீர்!

மனைவி: காந்திமதி
பிள்ளைகள்: ராதாமோகன் (பிரான்ஸ்)
சாந்தரூபன் (பிரான்ஸ்)
மதனரூபன் (பிரான்ஸ்)
ராதிகா (அனிதா),
சுதந்திரரூபன் (சந்துரு, யூனியன் கல்லூரி மாணவன்)
மருமக்கள்; பேள்ரஞ்சினி (பிரான்ஸ்)
பேரப்பிள்ளைகள்: ஸ்ரீ லாதிகா (பிரான்ஸ்)
நிருஜன் (பிரான்ஸ்) நிருபன் (பிரான்ஸ்).
கிரபி (பிரான்ஸ்)

ஸ்ரேசன் றோட், தெல்லிப்பளை.

(R. 504)

### சிந்தனைக்கு

ஆபத்துக்களை வெறுத்து ஒதுக்குவதால் அவை வலுத்து வளர்ந்து விடுகின்றன.

- எட்மண்ட் பர்க்


# ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 12-07-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05


## தமிழருக்கு ஒரே வழி...

தமிழினத்தை இந்நாட்டிலிருந்து பூண்டோடு அழிக்கும் சிறிலங்கா சிங்கள பௌத்த பேரினவாதிகளின் இனப் படுகொலைப் போர் தொடங்கி இன்றுடன் ஒரு மாதம் முடிவடைகிறது.

சிறிலங்கா அரசபடைகள் சகல தரப்பிலும் முன்னேறிக் கொண்டிருப்பதாகவும் கிழக்கு மாகாணத்தில் சகஜநிலை தோன்றியிருப்பதாகவும் விடுதலைப் புலிகளின் முகாம்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டு வருவதாகவும் சிறிலங்கா அரசும் அதன் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் என்னதான் பிரசாரம் செய்து வந்தாலும் உண்மைநிலை உலகுக்குத் தெரிந்துகொண்டுதான் இருக்கிறது.

ஊனமுற்ற அரசபடையினருக்குப் பெருந்தொகையாக ஊன்றுகோல்கள் வழங்குவதும் காயமடைந்த படையினருக்கு மருந்து மற்றும் உதவி தருமாறு வெளிநாடுகளிடம் வேண்டுகோள் விடுத்திருப்பதும் அரசு முயன்றாலும் மறைக்க முடியாத உண்மைகள்.

ஆயுதப்படைகளையும் சிங்களக் காடையர்களையும் கொண்டு இனப்படுகொலையைத் தீவிரப்படுத்திவரும் அதேசமயம் தமிழ் மக்களுக்கு எதிராகப் பொருளாதாரத் தடை நடவடிக்கைகளையும் சிறிலங்கா சிங்களப் பேரினவாத அரசு இரகசியமாக மேற்கொண்ட போதிலும் அதையும் உலகுக்கு மறைக்க முடியாது போய்விட்டது.

ஆட்பலம், ஆயுதபலம், அதிகாரபலம் என்று சகல பலமும் வளமும் சிறிலங்கா அரசிடம் இருந்தாலும் விடுதலைப் புலிப் போராளிகளிடமுள்ள மனோபலம் தன்னிடமில்லை என்பதை இப்போதாவது அரசு உணர்ந்திருக்க வேண்டும்.

கடந்த நாற்பதாண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தி அழித்தொழிக்க எடுத்த முயற்சிகள் இனியும் செல்லுபடியாகாது என்பதையும் சிறிலங்கா சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் இன்று புரிந்திருப்பார்கள்.

இந்த அடிப்படையில் இலங்கையில் இனியும் ஒற்றையாட்சி அமைப்பு முறையைக் கட்டிக்காக்க முடியாது என்பதை சிறிலங்கா அரசு உணர வேண்டும்.

தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாடு சகோதரத்துவம் என்பதெல்லாம் வெறும் வார்த்தைகளும் வாய்ப் பேச்சும்தான்.

1957 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்களுக்கு பிரதேச சபைகள், மாவட்ட சபைகள் என்று கூறிவந்து இப்போது மாகாண சபைகள் என்று பம்மாத்துக் காட்டப்படுகிறது.

வடக்கு கிழக்கு மாகாணசபை திருத்த மசோதா சமீபத்தில் சிறிலங்கா பாராளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. இத்திருத்த மசோதாவிலும்

# போர்க்கால நிலையும் பணப் புழக்க நெருக்கடியும் அதற்கான தீர்வுகளும்

தற்பொழுது எமது பிரதேசத்தில் நிலவுகின்ற சூழ்நிலையினால் 'பணப்புழக்கம்' என்பது மிகவும் குறைந்து ஒரு ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது என்று கூறலாம். வணிக வங்கிகளின் ஊடாக பணப் புழக்கம் ஏற்படுத்தப்படுவதற்கு அவை தமது கருமங்களை வழமை போல் கொண்டு நடாத்த வேண்டும். யாழ்.நகரத்தைப் பொறுத்தவரை வெவ்வேறு வணிக வங்கிகளின் பல்வேறு கிளைகள் காணப்படுகின்றன. இவையாவும் நகரத்தில் நடைபெறும் நிகழ்வுகளினால் தமது வங்கி அலுவல் நேரத்தை கட்டுப்படுத்தி உள்ளன அல்லது அலுவல்களுக்காக அனேக நாட்கள் தொடர்ந்து மூடிய நிலையில் உள்ளன. வங்கிகள் திறக்கப்பட்டு இருப்பினும்கூட அங்கு சென்று தமது கணக்குகளில் வைப்பில்இட பணமாகக் கொண்டு வரும் வாடிக்கையாளர்களும் மிக அரிதாகவே காணப்படுகின்றனர். மேலும் குறித்த வங்கிகள் வெளி இடங்களில் இருந்து தமது அன்றாட தேவைக்கு ஏற்ப பண நோட்டினை கொண்டுவரவோ அல்லது பெற்றுக் கொள்ளவோ முடியாத நிலையில் இருக்கின்றன.

வியாபாரிகளைப் பொறுத்தவரை அவர்கள் விற்பனை செய்வதற்கு போதிய பொருட்கள் அவர்கள் வசம் இல்லை அல்லது இருப்பாக இருந்தவை எல்லாம் விற்பனை செய்யப்பட்டு முடிந்துவிட்டது எனலாம். எனவே இவர்கள் யாரும் பணமாக எடுத்துச் சென்று வங்கிகளில் உள்ள தமது கணக்குகளில் வைப்பில் இட முடியாதநிலை நிலவுகின்றது. மேலும் வங்கிகளில் திரவ நிலையில் பணமாக எதுவுமே கையிருப்பில் இல்லை. அன்றாடம் யாராவது வைப்பில் இடும் தொகையை மீளவும் பணம் எடுப்பவர்களுக்கு வழங்குகின்றன.

இந்நிலையில் வங்கிகள் நாளாந்தம் தம்மிடம் பணமாக பெற்றுக்கொள்ள வரும் வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளன. வாடிக்கையாளர்கள் வற்புறுத்தும் இடத்து வங்கிகள் 'காசுக்கட்டளை' எனப்படும் வங்கிக் காசோலையை அவர்களுக்கு கொடுக்கும். இதனை வெளியில் எடுத்துச் சென்று காசாக்குவது அடுத்த பிரச்சினையாக மக்களுக்கு உள்ளது. அவ்வாறு சில இடங்களில் மாற்றக் கூடியதாக இருப்பினும் அங்கு கணிசமான ஒரு தொகையை தரகாகக் கொடுக்க வேண்டி ஏற்படும். இந்நிலையில் இதற்கு மாற்று வழியாக சில வழிவகைகளை நாம் இச்சந்தர்ப்பத்தில் சிந்திக்க வேண்டும்.

வங்கிப் பழக்க வழக்கம் கூடிய மேற்கு நாடுகளில் வங்கிகள் காசாக ஏற்பனவோ கொடுப்பனவோ செய்வது ஒரு குறைந்த வீதமாகும் என்பது அவதானிக்கத்தக்கது. வாடிக்கையாளர்கள் காசாக வங்கிகளில் இருந்து பெற்றுக் கொள்ளும் தொகை மிகச் சொற்பமானதாகும். தமது அன்றாட தேவைகளுக்கும், மற்றைய கொடுப்பனவுகள், வேறு பரிமாற்றங்கள் யாவற்றையும் காசோலை மூலமே செய்து கொள்கின்றார்கள்.

எனவே அதிக பணம் திரவ நிலையில் வங்கிகளில் முடக்கப்படுவது அங்கு குறைவாகவே காணப்படுகின்றது. உதாரணமாக லண்டன் மாநகரத்தில் மட்டும் நாளாந்தம் மத்திய தீர்வையகத்தின் ஊடாக ஏறத்தாள 1.5 மில்லியன் காசோலைகள் தீர்வையாக்கப்படுவதில் இருந்து அங்கு எவ்வளவு தூரம் காசோலைப் பரிமாற்றம், பழக்கவழக்கம் அமைந்துள்ளது என்பதனை நாம் உய்த்து உணரலாம்.

### துரைசிங்கம் - ரகு

நாமும் இம்மாதிரியான ஒரு நிலையை தற்போது நிலவும் சூழ்நிலையில் நமது பிரதேசத்தில்ஏற்படுத்திக் கொள்வதே ஒருசிறந்த வழியாகும். ஒவ்வொரு வாடிக்கையாளரும் தமக்கென உள்ள நடைமுறைக்கணக்கு ஊடாக தமது காசோலைகள் வழங்கும் பழக்கத்தினை ஏற்படுத்திக் கொண்டால்அதனை மற்றையோரும் ஏற்றுக் கொண்டால் ரூபாய் நோட்டிற்காக அலைந்து திரியும் பிரச்சினை இலகுவாக்கப்படும். உதாரணமாகபின்வரும் சந்தர்ப்பங்களில் நாம் காசோலைப் பரிமாற்றத்தினை உடனடியாக ஆரம்பிக்கலாம்,

1. வழமையாக நாம் பல சரக்கு சாமான்கள் கொள்வனவு செய்யும் கடைகளுக்கான கொடுப்பனவுகள்.

2. பலநோக்கு கூட்டுறவு சங்க கிளைகளில் வழமையாக பொருட்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களிடம் இருந்து காசோலைகளை பணத்திற்குபதிலாகபெறுதல்.

3. இனத்தவரிடையே நடைபெறும் திருமணங்கள் வேறு சடங்குகளுக்கு காசோலைகளையே அன்பளிப்பாக வழங்குதல்.

4. அறிந்தவரிடையே ஏதாவது கடன் தொகையை செலுத்தும் போது அதற்காக காசோலையைப் பயன்படுத்துதல் அதுபோல் கடனாக ஒரு தொகையைப்பெறும் போது காசோலை மூலமே பெறுதல்.

5. அரச நிறுவனங்களுக்கு உதாரணமாக மின்கட்டணம் போன்றவற்றை செலுத்தும் போது காசோலைகளையே பயன்படுத்துதல்.

6. முடிந்தளவு எந்த எந்த சந்தர்ப்பத்தில் காசோலைகள் மூலம் கொடுப்பனவு செய்ய முடியுமோ அந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் காசோலை மூலமாகவோ தமது கொடுப்பனவுகளை நிறைவேற்றுதல் (உதாரணமாக சந்தையில் மரக்கறி, மீன் வகைகள் வாங்கும் போது காசோலையை பயன்படுத்த முடியாதன்றோ)

பணத்தின் இயல்புகளில் ஒன்று அதனை எல்லோருமே ஏற்றுக்கொள்ளும் தன்மையாகும். பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும். ஒன்றே பணம் எனப்படும் இந்த வகையில் ஆதிகாலத்தில் விலையுயர்ந்த ஆபரணங்கள் சிப்பி ஓடுகள் போன்றவையும் பணமாக புழக்கத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. அதுபோலவே காசோலைகளையும் பொதுவாக எல்லோரும் எக்கொடுப்பனவிற்கும் ஏற்றுக் கொள்வார்களேயாயின் அவற்றை நாம் பண நோட்டிற்கு சமானமாக கருதலாம்.

ஆனால் இங்கு காசோலைகளைஇவ்வாறு புழக்கத்தில் ஏற்றுக் கொள்ளுவதற்கு சில முக்கிய அம்சங்களை அதனை வழங்குவோர் மனதினில் கொள்ள வேண்டும்.

அவையாவன:

1, காசோலைகளை தகுந்த முறையில் எழுத வேண்டும்:

2, தாம் வழங்கும்காசோலைகளுக்கு உரியபணம் வங்கியில் இருக்கின்றதா என நன்கு உறுதி செய்து கொண்டு அவற்றினை வரைய வேண்டும்.

3, காசோலையினை வழங்குவோரின் நாணய, நம்பகத் தன்மைகளே இங்கு முக்கியமானதாகும்.

4, நமது உடனடித் தேவைக்குரிய பொருள்களை பெற்றால் மட்டும் போதும் என்ற ஒருநோக்கத்தோடு காசோலைகளைப் போதிய பணமின்றி வரையக் கூடாது. காசோலைகள் தொடர்ந்தும் பலரின் கைமாறிச் செல்லும். அப்போது வங்கியில் பணம் இல்லாது விடின் அந்த தொடர் சங்கிலியே அறுந்து விடும் என்ற எண்ணம் அவர்கள் மனதினில் இருக்க வேண்டும்

எனவேஇவற்றினைகருத்திற் கொண்டு நாம் காசோலைப் புழக்கத்தினை எம் மக்கள் மத்தியில் ஏற்படுத்தி, அக் காசோலைகளை பணநோட்டிற்கு சமன் என்ற மனப்பாங்கினை வளர்த்துக் கொண்டால்,தற்போது வங்கிகளில் ஏற்பட்டு இருக்கும் பணநோட்டு புழக்க தற்காலிக நெருக்கடியை தவிர்த்துக் கொள்ள முடியும்.எம் மக்களும் பணத்திற்காக அலைந்து திரியும் சிரமமும்நீங்கும்என்பது திண்ணம்.

# சோவியத் கம்யூ. கட்சி பொதுச் செயலாளராக மிகெய்ல் கொர்பசேவ் மீண்டும்தெரிவு

(மாஸ்கோ)

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாள

விக்கு தெரிவு செய்யப்பட்டமையானது, பழைமை வாதிகளால் நம்பகமாக மாற்று

நேற்று முன் தினம் நடைபெற்ற கட்சியின் இருபத் தெட்டாவது மாநாட்டில்

கள் கிடைத்துள்ள அதே நேரத்தில் அவரை எதிர்த்து நின்றவருக்கு ஐந்து வாக்கு

சோவியத்தில் மிகவும் உயர்ந்தது கட்சியின் பொதுச் செயலாளர் பதவியேயாகும். இந்நிலையில் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டிக்கு பதிலாக கட்சி மாநாட்டில் இத்தெரிவு நடைபெற்றமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததென சோவியத் அர

கடந்த நாற்பதாண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தி அழித்தொழிக்க எடுத்த முயற்சிகள் இனியும் செல்லுபடியாகாது என்பதையும் சிறிலங்கா சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் இன்று புரிந்திருப்பார்கள்.

இந்த அடிப்படையில் இலங்கையில் இனியும் ஒற்றையாட்சி அமைப்பு முறையைக் கட்டிக்காக்க முடியாது என்பதை சிறிலங்கா அரசு உணர வேண்டும்.

தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாடு சகோதரத்துவம் என்பதெல்லாம் வெறும் வார்த்தைகளும் வாய்ப் பேச்சும்தான்.

1957 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்களுக்கு பிரதேச சபைகள், மாவட்ட சபைகள் என்று கூறிவந்து இப்போது மாகாண சபைகள் என்று பம்மாத்துக் காட்டப்படுகிறது.

வடக்கு கிழக்கு மாகாணசபை திருத்த மசோதா சமீபத்தில் சிறிலங்கா பாராளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. இத்திருத்த மசோதாவிலும் கூட அரசியலமைப்பிலுள்ள ஆறாவது திருத்தத்தின் அம்சம் இணைக்கப்பட்டிருக்கிறது.

இப்போதுள்ள மாகாணசபை அமைப்பு முறையும் தமிழ் மக்கள் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வதற்கு வழி வகுக்க மாட்டாது.

மாகாணசபையென்றும் போர் நிறுத்தமென்றும் பேச்சுவார்த்தைகளென்றும் இனியும் காலத்தை வீணாக்குவதில் அர்த்தமில்லை.

போர் நிறுத்தம் என்பதும் பேச்சுவார்த்தை என்பதும் தமிழ் மக்களை அழிப்பதற்கு மீண்டும் திட்டமிட்டு பாரிய தாக்குதலுக்குச் செய்யப்படும் முயற்சிகளுக்கான கால அவகாசமாகவே இருந்து வந்திருக்கிறது.

போர் நிறுத்தம் சமாதானப்பேச்சு வார்த்தை என்று கூறி உயிர் உடைமைகளை இழந்த அகதிகளாக வெளியேறியவர்கள் மீண்டும் தங்கள் இடங்களுக்குத் திரும்பிச் சென்றதும் அடுத்துப் புதிய தாக்குதலில் மேலும் அவர்களை அழிப்பதற்கான திட்டமாகவே கடந்த காலங்களிலிருந்து வந்திருக்கின்றது.

1956 ஆம் ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டுவரை அனுபவித்தது போதும். 1987 ஆம் ஆண்டிலும் அனுபவித்தாகிவிட்டது.

இன்று நடக்கும் போர் இறுதிப் போராக அமையட்டும்; விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தனது அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது போல பூரண சுயாட்சியுள்ள மாநில அரசு பெறவேண்டும். இல்லையேல் தமிழீழ தனி அரசு பெறுவதற்குப் போராடுவதைத்தவிர தமிழ் மக்களுக்கு வேறுவழியில்லை.

அல்லது இருப்பாக இருந்தவை எல்லாம் விற்பனை செய்யப்பட்டு முடிந்துவிட்டது எனலாம். எனவே இவர்கள்

பது அவதானிக்கத்தக்கது. வாடிக்கையாளர்கள் காசாக வங்கிகளில் இருந்து பெற்றுக் கொள்ளும் தொகை மிகச்

சந்தர்ப்பங்களில் நாம் காசோலைப் பரிமாற்றத்தினை உடனடியாக ஆரம்பிக்கலாம்,

1. வழமையாக நாம் பல

யாகும். பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும். ஒன்றே பணம் எனப்படும் இந்த வகையில் ஆதி

முடியும். எம் மக்களும் பணத்திற்காக அலைந்து திரியும் சிரமமும் நீங்கும் என்பது திண்ணம்.

# சோவியத் கம்யூ. கட்சி பொதுச் செயலாளராக

# மிகெய்ல் கொர்பசேவ் மீண்டும் தெரிவு

(மாஸ்கோ)

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக இரண்டாவது முறையாக மிகவும் அதிகப்படியான வாக்குகளால் திரு. மிகெய்ல் கொர்பசேவ் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 1989 ஆம் ஆண்டு இவர் முதலாவது முறையாக கட்சியின் பொதுச்செயலாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கட்சிக்குள் பழைமை வாதிகளின் கடும் எதிர்ப்பு நீண்டகாலமாக திரு. கொர்பசேவுக்கு இருந்து வந்தபோதும்; இந்தப் புதிய தெரிவானது அவரது தீவிர அரசியல், பொருளாதார நடவடிக்கையில் மேற்படி கட்சியின் பிரதிநிதிகள் கொண்டிருந்த நம்பிக்கையே என்று கூறப்படுகின்றது.

இதே வேளையில் திரு. கொர்பசேவ் மீண்டும் கட்சியின் பொதுச்செயலாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டமையானது, பழைமை வாதிகளால் நம்பகமாக மாற்று வேட்பாளர் ஒருவரை போட்டிக்கு நிறுத்த முடியாமல் போனமையே காரணமென்று கூறப்படுகின்றது.

நேற்று முன் தினம் நடைபெற்ற கட்சியின் இருபத்தெட்டாவது மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பில் 4600 மொத்த வாக்குகளில் திரு கொர்பசேவுக்கு 3000 க்கு மேற்பட்ட வாக்குகள் கிடைத்துள்ள அதே நேரத்தில் அவரை எதிர்த்து நின்றவருக்கு ஐந்து வாக்குகள் மாத்திரமே கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சோவியத்தில் மிகவும் உயர்ந்தது கட்சியின் பொதுச் செயலாளர் பதவியேயாகும். இந்நிலையில் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டிக்கு பதிலாக கட்சி மாநாட்டில் இத்தெரிவு நடைபெற்றமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததென சோவியத் அரசியல் வட்டாரங்கள் கருத்து தெரிவித்துள்ளன.

### மத்திய அரசின் உதவியுடன்

## அகதிகளைப் பராமரிக்க தமிழக முதல்வர் உறுதி

(சென்னை)

இந்திய மத்திய அரசின் உதவியுடன் தற்பொழுது தமிழகம் வந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் பராமரிக்கப் படுவார்கள் என்று தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி உறுதியளித்துள்ளார்.

கரூரில்இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் பொழுது தமிழக முதல்வர் இந்த உறுதிப்பாட்டினை தெரிவித்ததுடன்; 1983 ஆம் ஆண்டுக்குப் பிறகு நாற்பதாயிரத்துக்கு மேற்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகம் வந்ததாகவும், இம்முறை அந்தஎண்ணிக்கையிலும் கூடுதலான அகதிகள் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை அண்மைக் காலத்தில் மாத்திரம் 18,336 இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ்நாடு வந்துள்ளதாக கூறிய முதல்வர்; நேற்று முன் தினம் 758 குடும்பங்களைச் சேர்ந்த 3156 அகதிகள் வந்ததாகவும் கூறினார்.

## காலராவினால் 90 பேர் பலி

(பீகார்)

பீகார் மாநிலத்தில் ஏற்பட்ட காலரா நோயினால் இதுவரை 90 பேர் இறந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மூன்றாம் உலக நாடுகளுக்கான வட்டி விகிதம் குறைப்பு

(வாஷிங்டன்)

உலகவங்கி, மூன்றாம் உலக நாடுகளிலிருந்துபெற்று வரும் வட்டியின்விகிதத்தை குறைத்துள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் சமீபத்திய மாறுபடும் கடன்களுக்கு இது வரை இருந்து வந்த 7.75 விகித வட்டி7.72 ஆக குறைக்கப்பட்டுள்ளது. பழைய கடன்களுக்கு இருந்து வந்த 7.75 விகிதவட்டி 7.70 ஆக குறைக்கப் பட்டுள்ளது.

மூன்றாம் உலக நாடுகளுக்கு கடனாக 4700 கோடி டாலர் வழங்கப்பட்டுள்ளதாக உலக வங்கி அறிக்கை தெரிவித்துள்ளது.

## நிமிடத்துக்கு 20 லட்சம் டாலர்

(லண்டன்)

உலகில் பாதுகாப்புக்கென இருபது லட்சம் டாலர் செலவிடப் படுவதாக கூறப்படுகின்றது. இந்த இருபது லட்சம் டாலரும் தலா ஒவ்வொரு நிமிடத்துக்கும்செலவிடப் படுவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## 5 1/2 கோடிபேர் தொழில் இழப்பர்

(லண்டன்)

உலகில் ஆயுதக் குறைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டால் மொத்தமாக ஐந்தரைக் கோடி மக்கள் தமது தொழில்களை இழக்கநேரிடும் என்று சர்வதேச தொழிலாளர் நல ஆய்வு நிறுவனம் அறிவித்துள்ளது.

## ஆப்கானிஸ்தானுக்கு உதவ அமெரிக்கா விருப்பம்

(வாஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் பத்தாண்டு காலமாக இடம் பெற்றுவரும் யுத்த நிலைமையை ஒரு முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் அந்நாட்டு அதிபர் நஜிபுல்லாவுக்கு ஆதரவளிக்க அமெரிக்கா விருப்பம் தெரிவித்துள்ளது.

இந்த நோக்கத்தின் அடிப்படையில் சோவியத் யூனியனுடன் கலந்தாலோசனை நடத்தவும் தயார் நிலையில் உள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதேவேளை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. ஜேம்ஸ் பேகர் இந்த விடயம் குறித்து சோவியத்துடன் தொடர்புகொள்ளும் வகையில் சோவியத்தின் வெளியுறவு அமைச்சரைச் சந்திக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இருஅமைச்சர்களின் சந்திப்புக்கான திட்டமொன்று அமெரிக்காவினால்தயாரிக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய கடற்படை ரோந்து

(மண்டபம்)

இந்திய கடற்படைபோர்க் கப்பல் ஒன்று பாக்குநீரிணையில்இராமேஸ்வரம்பகுதி கடற்பகுதியில் ரோந்து புரிகிறது.

இந்தக் கப்பல் துறை முக வசதியில்லாத பகுதிகளிலும் படையினரை இறக்கக்கூடியது.

## உதவிப்பணம்

(சென்னை)

கடந்த மாதம் 19ஆம்திகதி சுட்டுக் கொல்லப்பட்ட ஈ.பி. ஆர். எல். எவ் உறுப்பினர்கள் ஏழு பேரின் குடும்பங்களுக்கு உதவிப்பணமாக தலா75 ஆயிரம் முதல் 1லட்சத்து 25 ஆயிரம் வரை வழங்கப்பட்டுள்ளதாக தமிழக அரச உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை காயமடைந்த 22பேருக்குகாயத்தின் தன்மை, குடும்பநிலை என்ற அடிப்படையில் உதவிப்பணம் பகிர்ந்து அளிக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

## மருத்துவ அதிகாரி நியமிக்கப்பட்டார்

சாவகச்சேரி ஆஸ்பத்திரியின் மருத்துவ அதிகாரியாக வைத்திய கலாநிதி தா. சிவபாதம் நியமிக்கப்பட்டுள்ளார்

தென்மராட்சி நோயாளர் நலன்புரி சங்கத்தின் வேண்டுகோளைத் தொடர்ந்தே வைத்திய கலாநிதி தா. சிவபாதம் இங்கு வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

வைத்திய கலாநிதி தா. சிவபாதம் தொற்று நோயியல் பிரிவு அதிகாரியாக முன் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (35)

## நிக்கரகுவாவில்கட்டுப்படுத்த முடியாத கிளர்ச்சிகள்

(மானாகுவா)

நிக்கரகுவாவில் இடம்பெற்றுள்ள வன்முறை சம்பவங்கள் கட்டுப்படுத்த முடியாத நிலையில் வளர்ந்து வருவதாக கூறப்படுகின்றது.

அரச ஆதரவாளர்களுக்கும் சம்பள உயர்வு கோரி கிளர்ச்சியில் இறங்கியுள்ள தொழிலாளர்களுக்கும் இடையிலான மோதல்களைத் தொடர்ந்தே இந்த வன்முறை சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

மேற்படி தொழிலாளர்கள் தமது சம்பளஉயர்வு சம்பந்தமாக அரசுக்கு கோரிக்கை விடுத்ததுடன், கடந்த ஒரு வாரகாலமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அரச ஆதரவாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையிலான ஆயுத கைகலப்பினால் நான்கு பேர் கொல்லப்பட்டுள்ளனர். மின்சாரம், நீர் விநியோகம் அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ளதுடன், மானாகுவா சர்வதேச விமான நிலையமும் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## பனிக்கட்டி ஆலை சேதம்

(விசேட நிருபர்)

வடமாகாண கடல்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின். சமாச பனிக்கட்டி ஆலை, கோழித்தீன் ஆலைகள் கடந்த இருபது நாட்களுக்கும் மேலாக செயலிழந்து விட்டதால் சமாசத்திற்கு பாரிய நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக சமாச தலைவர் டாக்டர் ஏ. எல். ஏபிரகாம் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

பங்களாதேஷுக்கு சங்கு ஏற்றுமதியும் தடைப்பட்டுள்ளது. சங்கத்தின் பனிக்கட்டி ஆலை பொம்மர் தாக்குதலால் சேதம் அடைந்ததுடன் கடந்த வியாழன் திருடர்கள் ஆலைக்கதவை உடைத்துத் திருட்டும் நடத்தியுள்ளனர்.

இதனால் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கவும், தொழிலை வேறிடங்களுக்கு இடம்பெயர்த்து நடத்தவும் நிர்வாகம் ஆலோசித்து வருவதாக அவர் மேலும் கூறினார். (21)

## முல்லைத்தீவில் புதிய முகாம்கள்

(முல்லைத்தீவு)

கிழக்கிலிருந்துஇடம்பெயர்ந்தோர் முகாம்கள் தண்ணீரூற்று, முள்ளியவளைப் பகுதிக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, செம்மலை, புதுக்குடியிருப்பு முகாம்களில் இடவசதி இல்லாததால்ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் முகாம்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

சுண்டுக்குளி கிளை நூலகம்



Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

### இந்தியாவுக்கு முஸ்லிம் அகதிகள்

இலங்கையிலிருந்து முதன் முதலாக முஸ்லிம் அகதிகளும் இராமேஸ்வரம் வந்துள்ளதாக தினமணி செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த திங்கள் இவர்கள் இங்கு வந்தனர்.

# தமிழர் படுகொலையை கண்டித்து சென்னையில் ஆர்ப்பாட்டம்!

## ஜெயலலிதா வாழப்பாடி உட்பட 100 பேர் கையொப்பத்துடன் மகஜர் கையளிப்பு!

வடக்கு, கிழக்கு பகுதிகளில் யுத்த நிறுத்தத்துக்கு உத்தரவிட வேண்டும் என்றும், தமிழ் மக்களை அரச படைகள் கொல்வதைத் தடுத்து நிறுத்துமாறும், அங்கு அமைதி ஏற்படுத்துமாறும் கோரி நேற்று சென்னையில் எதிர்க் கட்சியினர் சென்னையில் உள்ள இலங்கை உதவித் தூதுவர் காரியாலயம் முன்பாக ஆர்பாட்டம் நடத்தினர்.

ஐம்பத்தைந்து சட்டசபை அங்கத்தவர்களும், நாற்பத்தைந்து பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்தஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

பலர் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றையும் இவர்கள் இலங்கைத் தூதரகத்தில் ஒப்படைத்து அதனை ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு அனுப்புமாறும் கேட்டனர்.

இலங்கை விமானப்படைப் படையினரின் கண்மூடித்தனமான தாக்குதலால் அங்குள்ள தமிழ் மக்கள் உணவு, நீர் போன்ற அத்தியாவசிய வசதிகள் இன்றி அகதிகளாக தமிழகத்துக்குதினமும் ஆயிரக்கணக்காக வருகின்றனர்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தைச் சரியாக அமுல் செய்து இலங்கைத் தமிழர் படுகொலையைத் தடுத்து நிறுத்தி அவர்களின் துயரை துடைக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கொடுத்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா, இந்திரா காங்கிரஸ் தமிழ் நாடு பிரிவு தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி, இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த த. பாண்டியன், அப்துல் சமது (இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சமது பிரிவு), முன்னாள் அமைச்சர்கள் திருமதி மரகதம் சந்திரசேகர், திருமதி மாதவன், கே. ஏ. கிருஷ்ணசாமி, கே. காளிமுத்து, பி. சிதம்பரம், திருமதி அருணாசலம், எஸ். திருநாவுக்கரசு, முன்னாள் உபசபாநாயகர் தம்பித்துரை, மற்றும் ஜி. கே. மூப்பனார் உட்பட பலர் இம் மகஜரில் கையொப்பமிட்டிருந்தனர்.

## சந்தைக்கு போனவர்கள் கைது

(முல்லைத்தீவு)

வவுனியா நகரில் ஒதுக்குப்புறமாகத் தற்காலிகமாக மக்கள் கூடும் சந்தைப் பகுதியைச் சுற்றி வளைத்த சிங்கள இராணுவம் அங்கிருந்த தமிழ் மக்களைக் கைதுசெய்து கூட்டிச் சென்றுள்ளது.

நேற்று முன்தினம் காலை நடந்த இச் சம்பவத்தில் இது வரை எவரையும் விடுதலை செய்யவில்லை.

அயல் கிராமங்களில்இருந்து கிராமங்களின் ஊடாக சென்று அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்கு கோவில்குளக் கிராமத்துக்கு நடந்து வந்தவர்களுக்கும் இந்தக்கதி ஏற்பட்டதாம் இரு இடங்களிலும் மொத்தம் 450 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

பிந்திக் கிடைத்த செய்திகளின்படி கைதுசெய்யப்பட்ட 450 பேர்களில் 12 பேரை மட்டும் தடுத்து வைத்துக் கொண்டு மிகுதிப்பேரை விடுதலை செய்துள்ளனர். (58)

## சேதமடைந்த, அகதிகள் தங்கியுள்ள பாடசாலை விபரங்களை சமர்ப்பிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமான படை விமானங்களின் குண்டுவீச்சுகளால் சேதமடைந்த பாடசாலைகளும் ஏனைய மாவட்டங்களிலிருந்து யாழ் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து தற்காலிகமாக தங்கியிருக்கும். பாடசாலைகளும் தத்தமது பாடசாலைகளின் விபரங்களை சேகரித்து சம்பந்தபட்ட அதிகாரிகள் எதிர் வரும் பதினாறாம் திகதி காலை 9.30 மணியளவில் யாழ். நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலைக்கு கொண்டுவருமாறு பிராந்திய கல்விப்பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்.


கோட்டங்களுக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கொத்தணி அதிபர்கள், தேசிய பாடசாலை அதிபர்கள் ஆகியோருக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு வேண்டியுள்ளார். (லோ)

## முள்ளியவளை மருந்தகத்தில் மருந்துகள் இல்லை

(முல்லைத்தீவு)

முள்ளியவளை வைத்தியசாலையில் நோயாளர் தங்கு வசதி இல்லாத மருந்தகம் ஒன்று செயல்படுகின்றது. வைத்தியசாலையில் நோயாளருக்கு வேண்டிய மருந்துவகைகள் இல்லாததால் இலவசமாக மருத்துவ ஆலோசனையும், மருந்துச் சீட்டுகளும் மாத்திரம்வழங்கப்படுகின்றன நோயாளர் வெளியில் மருந்தைக் காசு கொடுத்து வாங்க வேண்டியுள்ளதாம். (58)

## ஒப்பந்தகாரர் கூட்டம்




## பொதுக்கூட்டத்தில் இருந்து செய்தியாளர்வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாணவர் ஒன்றிய பொதுக் கூட்டத்திற்கு சென்றிருந்த பத்திரிகையாளர்களை மாணவர் ஒன்றியத் தலைவர் கலையரங்கத்தில் இருந்து வெளியேற்றினார்.

இக்கூட்டத்தில் வடகிழக்கில் நிகழும் இனப்படுகொலைக்கு எதிராக பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தால் எடுக்சப்பட விருக்கும் நடவடிக்கைசள் பற்றி ஆராய இருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## கொழும்பு மினி பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தியிலிருந்து நேற்று மாலை மினி பஸ் ஒன்று கொழும்பு சென்றது. அத்தியாவசிய வேலைகள் கொழும்பிலுள்ளவர்களும் வெளிநாடுகளுக்குச் செல்லவிருப்பவர்களும் இவ் மினி பஸ்சில் பிரயாணத்தை மேற்கொண்டார்கள். பிரயாணக்கட்டணமாக பிரயாணிகளிடம் இருந்து தலா ரூபா 200 வசூலிக்கப்படுகிறது.

### விடுதலை . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டைய பெற்றோர்களது கடமையாகும் என்றும் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் இவர்கள் முன்பு செய்தது போன்ற துரோகத்தனமான செயல் எதையும் எம்மால் அனுமதிக்க முடியாது. இவர்கள் விடுதலைப்போராட்ட உணர்வு ஊட்டப்பட வேண்டியவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (லோ)

### மண்மீட்பு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி )

ட்டம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்காகவே என மக்கள் தவறாக நினைக்கிறார்கள்

### வல்வையில்

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி )

கப்டன் கொலின்ஸ் மன்னார் ஆகியோருக்கு அஞ்சலி தெரிவித்து வல்வெட்டித்துறை

மக்களுக்கு படி வேண்டப்படுகிறார்கள.

முகாம்களில் போதிய சுகாதார. வைத்திய வசதிகள் இல்லாமையால் தொற்று நோய்கள் பரவும் வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றது. உணவுப் பற்றாக்குறையால் குழந்தைகள், தாய்மார்கள் மிகவும் பாதிக்கப்பட்டு எதிர் காலத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தவாய்ப்புள்ளது

பல முகாம்களில் மாற்றுடைகள் கூட இல்லாமல் மக்கள் அல்லலுறுகிறார்கள். முகாம்களில் உள்ள பலகுறைபாடுகளால் குழந்தைகள் பராமரிப்பு, ஒழுக்கக்கல்வி வாய்ப்புகள் முற்றாகவே பாதிக்கப்பட்டுள்ளது.

எமது மக்களின் நலனில் ஆர்வமுடைய ஒவ்வொருவரும் இன்றைய சூழ்நிலைகள் நீண்டகால அடிப்படையில் எப்படியான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும் என்பதை புரிந்துகொண்டுஇப்பிரச்சினைகளுக்கான உடனடி தற்காப்பு நடவடிக்கைகளிலும் மாற்றுத் தீர்வுகளையும் காணவேண்டியது மிகவும் அவசியம்.

இவ்விடயம் தொடர்பாக நாம் தொண்டர்களுக்கு பல கட்டங்களாகப் பயிற்சிகள் வழங்கி மக்களதுஅடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியதாகவும், அவர்களை எதிர்காலத்தில் சிறந்த பிர

யைச் சுற்றி வளைத்த சிங்கள இராணுவம் அங்கிருந்த தமிழ் மக்களைக் கைதுசெய்து கூட்டிச் சென்றுள்ளது.

நேற்று முன்தினம் காலை நடந்த இச் சம்பவத்தில் இது வரை எவரையும் விடுதலை செய்யவில்லை.

அயல் கிராமங்களிலிருந்து கிராமங்களின் ஊடாக சென்று அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்கு கோவில்குளக் கிராமத்துக்கு நடந்து வந்தவர்களுக்கும்

பிந்திக் கிடைத்த செய்திகளின்படி கைதுசெய்யப்பட்ட 450 பேர்களில் 12 பேரை மட்டும் தடுத்து வைத்துக் கொண்டு மிகுதிப்பேரை விடுதலை செய்துள்ளனர். (58)

## ஒப்பந்தகாரர் கூட்டம்

(கோண்டாவில்)

வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்க அங்கத்தவர்களுக்கான பொதுக்கூட்டம் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்குக் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இவ்விசேட கூட்டத்திற்கு சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி சங்கம் கேட்டுள்ளது.

### போர்க்கால

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர்கள் அனைவரையும் தற்காலிக மினிபஸ் தரிப்பு நிலையமான முத்திரைச் சந்தையில் எதிர்வரும் சனிக்கிழமை பத்துமணியளவில் கூடுமாறு வேண்டியுள்ளார்.

பாதை 771இல் உள்ள பாவனைக்குகந்த சகல வாகனங்களையும் விடுதலைப் புலிகளின் போர்க்கால நடவடிக்கைகளுக்கு கொடுத்து தவுமாறு பொன். மதிமுகராசா பணித்துள்ளார். மேற்படி பணிப்புரைகளை செயற்படுத்தத் தவறும் வாகன உரிமையாளரின் பாதை அனுமதி இரத்துச் செய்யப்படும் என அவர் பத்திரிகைக்கு விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானங்களின் குண்டுவீச்சுகளால் சேதமடைந்த பாடசாலைகளும் ஏனைய மாவட்டங்களிலிருந்து யாழ் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து தற்கா

பாடசாலைகளின் விபரங்களை சேகரித்து சம்பந்தபட்ட அதிகாரிகள் எதிர்வரும் பதினாறாம் திகதி காலை 9.30 மணியளவில் யாழ். நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலைக்கு கொண்டுவருமாறு பிராந்திய கல்விப்பணிப்பாளர் இராசுந்தரலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்.

கோட்டங்களுக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கொத்தணி அதிபர்கள், தேசிய பாடசாலை அதிபர்கள் ஆகியோருக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு வேண்டியுள்ளார். (லோ)

## முள்ளியவளை மருந்தகத்தில் மருந்துகள் இல்லை

(முல்லைத்தீவு)

முள்ளியவளை வைத்திய சாலையில் நோயாளர் தங்கு வசதி இல்லாத மருந்தகம் ஒன்று செயல்படுகின்றது. வைத்தியசாலையில் நோயாளருக்கு வேண்டிய மருந்துவகைகள் இல்லாததால் இலவசமாக மருத்துவ ஆலோசனையும், மருந்துச் சீட்டுகளும் மாத்திரம்வழங்கப்படுகின்றன. நோயாளர் வெளியில் மருந்தைக் காசு கொடுத்து வாங்க வேண்டியுள்ளதாம். (58)

## சுயமாதத் தம்மைப் பாதுகாக்கும் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

சுயமாக தம்மை பாதுகாத்துக் கொள்ளும் வகையில் போர்க்காலத்தை ஒட்டிய சில விசேட பயிற்சிகளை யாழ். மாவட்ட முறைசாரக் கல்வி பிரிவு மாணவர்கள் பெற்று வருகின்றனர்.

போர் வேளைகளில் தம்மை பாதுகாத்துக் கொள்வதுடன் பொதுமக்களையும் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் முதலுதவிப் பயிற்சி வழங்குதல் இரத்ததானம் வழங்கத்தயார் நிலையில் மாணவர்களை ஏற்பாடு செய்தல், உப உணவுப் பயிர்ச்செய்கை செய்தல் சமூக சேவைகளில் மாணவர்களைக் கூடுதலாக ஈடுபட வைத்தல் போன்றவற்றை முறைசாரா பயிற்சிப் பிரிவு ஆரம்பித்து செய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இவை எல்லாவற்றையும் விட முறைசாராப்பிரிவு மாணவர்கள் பலர் தற்போது சுய பாதுகாப்பு பயிற்சிக்கு முன்னுரிமை அளித்து இப்பயிற்சியை பெற்று வருவதும் குறிப்பிடத் தக்கதாகும். (லோ)

## இந்துக் கல்லூரியில் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துக் கல்லூரி மாணவ முதல்வர்கள், சாரணர்கள், சென்ஜோன் முதலுதவிப் படை உறுப்பினர்கள், உயர் வகுப்பு மாணவர்கள் ஆகியோரை இன்று காலை பத்து மணியளவில் கல்லூரியில் கூடுமாறு வேண்டப்படுகின்றனர். ஏலவே வேறு பொதுச் சேவைகளில் ஈடுபட்டுள்ள இந்துக் கல்லூரி மாணவர்கள் இவ்வொன்று கூடலில் பங்கு கொள்ளத் தேவையில்லையாம்.


## இடமாற்றம்

## ரவி அன் ராஜ் சில்க்

77, பெரியகடை வீதியில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம் தற்போது 34, செட்டித்தெரு ஒழுங்கை நல்லூரில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(B/1244)


### தமிழர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது வேண்டாமா என்பது திட்டவட்டமாக இப்போது கூறமுடியாது என்றும் அவர் செய்தியாளரின் கேள்விக்கு பதிலளிக்கையில் கூறினார்.

நிலமைகள் எப்படி உருவாகின்றன என்பதை பொறுத்து காலம்தான் கணிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழீழத்தில் நிரந்தரமான ஒரு சூழ்நிலை ஏற்படக் கூடிய வழிமுறைகள் குறித்து யோசிக்க வேண்டியுள்ளது.

தமிழீழத்தில் நிரந்தரமான அமைதி ஏற்பட வேண்டும் என்று திராவிட முன்னேற்றக்கழகம் கோரிவந்துள்ளது.

தனி ஈழத்தை வலியுறுத்தாதுவடக்கு,கிழக்கு மாகாணம்அமைந்த மாநிலம் சுயாட்சி வழங்க வேண்டும் எனவும் தி. மு. க கோரிவந்துள்ளது.

தனித்தமிழ் ஈழத்தை திராவிட முன்னேற்றக்கழகம் ஈழத்தமிழ் மக்களிடம் எக்காலத்திலும் திணிக்க விரும்பவில்லை.

இவ்வாறு முதலமைச்சர் கூறினார்.

## கடமைக்கு வருமாறு அரசஅதிபர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும், கச்சேரியிலும் கடமையாற்றும் சகல உத்தியோகத்தர்களையும் கடமைக்கு வருமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் கே. மாணிக்கவாசகர் கேட்டுள்ளார்.

தங்க வசதி இல்லாத ஆண், பெண் இருபாலாருக்கும் இருப்பிட வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## மீண்டும் சேவை

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாண சேவை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப் படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

### கல்முனையில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரையாக்கப்பட்டுள்ளன. அத்தோடு சிறிலங்கா இராணுவத்தினர் அங்கு முகாம் அமைத்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கல்முனைக்கும் நிலாவரைக்கும் இடையில் தமிழர் எவரும் இல்லை என்றும், அவர்கள் ஜிகாத்தால் துரத்தப்பட்டுள்ளனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### பலாலி . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் நேற்றுக்காலை வசாவிளான் பகுதியால் இராணுவத்தினர் வெளியேற முற்பட்டபோது விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும்மோதல் ஏற்பட்டது. இராணுவத்தினரின் இம்முயற்சியும் முறியடிக்கப்பட்டது. இழப்புக்களுடன் இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றனர். (ம)

### விடுதலை . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டைய பெற்றோர்களது கடமையாகும் என்றும் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் இவர்கள் முன்பு செய்தது போன்ற துரோகத்தனமான செயல் எதையும் எம்மால் அனுமதிக்க முடியாது. இவர்கள் விடுதலைப்போராட்ட உணர்வு ஊட்டப்பட வேண்டியவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (லோ)

### மண்மீட்பு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி )

ட்டம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்காகவே என மக்கள் தவறாக நினைக்கிறார்கள் விடுதலைப் போராட்டம் மக்களுக்காகவே அன்றி புலிகளுக்காக அல்ல புலிகளுக்காகப் போராட்டத்தில் பங்கு கொள்ளாது உங்களுக்காக, உங்கள் மக்களுக்காக உங்கள் கடமையைச் செய்யுங்கள்'' என்றார்.

தற்காப்பு யுத்தப்பயிற்சி வழங்குதல் விடயமாக ஆலோசிக்கப்பட்டது.ஆசிரியர்களும், கல்வி நிலைய நிர்வாகிகளும் யுத்தப் பயிற்சி பெற விரும்பம் தெரிவித்தனர். (மு)

### கொக்காவிலில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் நடைபெற்றது. ஏற்கனவே அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்துள்ளதால் பொதுமக்கள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

ஒரே வேளையில் நான்கு விமானங்கள் மீதும், இராணுவ முகாம்மீதும்விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதலை மேற்கொள்ளுவதில் மிகவும் உக்கிரமாக ஈடுபட்டுள்ளனர்.

மேற்படி மோதல் நடைபெற்றுக் கொண்டிருந்த போது விமானத்திலிருந்து பாரிய குண்டுகள் வீசப்பட்டதனால் அதன் தாக்கம் கிளிநொச்சியிலும் ஏற்பட்டது. கட்டடங்கள் ஆட்டம் கண்டன. விமானங்கள் பல மைல் தூரத்திற்கப்பாலுள்ள கிளிநொச்சிப் பகுதியிலும் சில குண்டுகளை வீசியதால் கிளிநொச்சியிலுள்ள மக்களும் பயத்தினால் இடம் பெயர்ந்தனர்.

நேற்றுக் காலை 7 மணியுடன் விமானங்கள் திரும்பிச் சென்றன. இதனால் பொது மக்கள் மீண்டும் கிளிநொச்சிக்குத் திரும்பி வருவதைக் காணக்கூடியதாக இருந்தது. தாக்குதல்கள் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இத் தாக்குதல்பற்றிக் குறிப்பிட்ட சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு நான்கு இராணுவத்தினர் இறந்ததாகவும், ஒன்பதுபேர் காயமடைந்ததாகவும் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தியிலிருந்து நேற்று மாலை மினி பஸ் ஒன்று கொழும்பு சென்றது. அத்தியாவசிய வேலைகள் கொழும்பிலுள்ளவர்களும் வெளிநாடுகளுக்குச் செல்லவிருப்பவர்களும் இவ் மினி பஸ்சில் பிரயாணத்தை மேற்கொண்டார்கள். பிரயாணக்கட்டணமாக பிரயாணிகளிடம் இருந்து தலா ரூபா 200 வசூலிக்கப்படுகிறது.

### வல்வையில்

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி )

கப்டன் கொலின்ஸ் மன்னார் ஆகியோருக்கு அஞ்சலி தெரிவித்து வல்வெட்டித்துறை நகரம் சோகமயமாகக் காணப்பட்டது. வீதிகள் தோறும் வாழைமரம், தென்னை ஓலை போன்றவற்றால் அலங்கரிக்கப்பட்டு சோககீதம் எழுப்பப்பட்டிருந்தது. விடுதலைப் புலிகளின் புலிச்சின்னம் பொறிக்கப்பட்டகொடிகள் அரைக்கம்பத்தில்தொங்கிக்கொண்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

மேலும் பல இடங்களிலும் மக்கள் கூடிநின்று மூன்று புலிகளின் வீரத்தையும் மெச்சிப் பேசியதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (லோ)

பாடுகளால் குழந்தைகள் பராமரிப்பு, ஒழுக்கக்கல்வி வாய்ப்புகள் முற்றாகவே பாதிக்கப்பட்டுள்ளது.

எமது மக்களின் நலனில் ஆர்வமுடைய ஒவ்வொருவரும் இன்றைய சூழ்நிலைகள் நீண்டகால அடிப்படையில் எப்படியான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும் என்பதை புரிந்துகொண்டுஇப்பிரச்சினைகளுக்கான உடனடி தற்காப்பு நடவடிக்கைகளிலும் மாற்றுத் தீர்வுகளையும் காணவேண்டியது மிகவும் அவசியம்.

இவ்விடயம் தொடர்பாக நாம் தொண்டர்களுக்கு பல கட்டங்களாகப் பயிற்சிகள் வழங்கி மக்களதுஅடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியதாகவும், அவர்களை எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாக வாழவைக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

எமது மக்களின் நலனில் ஆர்வமுள்ள ஒவ்வொருவரும் எம்முடன் தொடர்பு கொண்டு முழுமையாகவோ, பகுதிநேரமாகவோ இன்னலுறும் எமது மக்களுக்கு சேவையாற்றமுன்வர வேண்டுமென இக்சழகம்கேட்டுள்ளது

### பாலம்போட்டாற்றில்

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி )

வண்டி புரண்டது. இச்சம்பவம் நேற்று முன்தினம் 9 மணியளவில் நடந்தது. உயிர்ச்சேத விபரம் தெரியவில்லை. (ம

## அவசரகாலத்தில் - சுகாதாரசேவைகள்

வாகனப் போக்குவரத்து இன்மையாலும் அகதிகள் கூடுதலாக முகாம்களில் சேரும் நிலைமையினாலும் எமது பிரதேசத்தில் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்கள்) சுகாதாரம் மிகவும் பாதிப்பு அடையும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே பின்வரும் ஒழுங்குகளை கையாளுமாறு வைத்திய நிலையப் பொறுப்பதிகாரிகளும், வெளிக்கள ஊழியர்களும் வேண்டப்படுகிறார்கள்.

(1) வைத்திய நிலையங்களுக்குச் சூழலில் உள்ள அகதி முகாம்களுக்கு சகல நிலையப் பொறுப்பதிகாரிகளும் முடியுமான அளவு தினமும் தரிசிக்கும்படி வேண்டப்படுகிறார்கள். நடமாடும் மருத்துவ நிலையங்களுக்கு போகவேண்டிய அவசியம் இல்லை.

(2) வெளிக்கள ஊழியர்கள் அகதி முகாம்களுக்கு தினமும் விஜயம் செய்தல் வேண்டும். நோய்பரவும் சாத்தியக் கூறுகள் இருப்பின் எமது கவனத்திற்குக் கொண்டு வரல் வேண்டும்.

(3) சுகாதார வைத்திய அதிகாரிகள் அகதி முகாம்களுக்கும் வைத்திய நிலையங்களுக்கும் தரிசிப்பு மேற்கொள்ளல் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

(4) அத்தியாவசிய மருந்து தேவைப்படும் நிலையப் பொறுப்பதிகாரிகள் எம்முடன் உடன் தொடர்புகொள்ளவும். அத்துடன், தமது பகுதியில் உள்ள அரசுசார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு தமது மருந்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யுமாறு வேண்டுகிறேன். கிழமைகள் தோறும் எமக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கவும்.

Dr. ந. கனகசபை
(சுகாதார சேவைகள் பணிப்பாளர்)
11-7-90 யாழ்ப்பாணம்.
(B/1246)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது